NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 1 November 2017

# இலவச சட்ட சேவைக்குப் புதிய நிலையம்

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சட்டத் துறை இலவச சட்ட சேவைக்கென புதிய நிலையத்தை நேற்று அறிமுகம் செய்தது.

அந்த நிலையம் பலதரப்பட்ட இலவச சட்ட சேவைகளையும் பல்கலைக்கழக சட்டத் துறை மாணவர்களுக்கு செயல்வழிச் சட்டக் கல்வியையும் வழங்கும்.

புதிய நிலையத்தின் திறப்பு விழாவில் கலந்துகொண்ட சட்ட, நிதி மூத்த துணை அமைச்சர் இந்திராணி ராஜா, "சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக சட்டக் கல்வி மாணவர்கள் தாங்கள் வாழும் சமூகத்திற்கு ஆதரவளிக்கும் அதேவேளையில், அவர்களுக்கான வாய்ப்புகளின் தரத்தையும் எண்ணிக்கையையும் இந்தப் புதிய நிலையம் அதிகரிக்கும்," என்று கூறினார்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் இலவச சட்ட சேவை அலுவலகத்தையும் சட்டத் துறையின் செயல்வழி சட்டக் கல்வித் திட்டங்களையும் புதிய நிலையம் ஒன்றிணைக்கும்.

சிறந்த நடைமுறைகளை உருவாக்கி, நிகழ் உலகச் சவால்களை அறிந்து, அவற்றை எதிர்கொள்ள ஆயத்தமாகும் வகையில் புதிய நிலையம் பல்கலைக்கழக சட்டத் துறை மாணவர்களுக்கு நல்ல தளம் அமைத்துக் கொடுக்கும்.

கடந்த மாதம் என்யுஎஸ் சட்டத் துறை தனது 60வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. அவ்விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுப் பேசிய தலைமை நீதிபதி சுந்தரேஷ் மேனன், இலவச சட்ட சேவைகளில் மாணவர்கள் பங்கெடுக்கும் வகையில் அதிகமான வாய்ப்புகளை அடையாளம் காணவேண்டும் என்று பல்கலைக் கழகத்தை வலியுறுத்தி இருந்தார்.

என்யுஎஸ் சட்டக் கல்வி மாணவர்கள் தங்களது இரண்டாம் ஆண்டு படிப்பின்போது சராசரியாக 48 மணி நேரம் இலவசமாக சட்ட சேவை புரிகின்றனர்.

"இந்தப் புதிய நிலையம் சட்டம் எப்படி செயல்படுகிறது என்பதை அறிந்துகொள்வதில் மாணவர்களுக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தும்," என்று என்யுஎஸ் சட்டத் துறைத் தலைவர் சைமன் செஸ்டர்மேன் தெரிவித்தார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.